மோட்டார் வாகன தீர்ப்பாயம், ஜெயங்கொண்டம்.

(சிறப்பு நீதிமன்றம் எண் 1, ஜெயங்கொண்டம்)

முன்னிலை திரு. மு. வடிவேல், பி.காம்.,பி,எல்.,

சிறப்பு நீதிபதி எண் 1, ஜெயங்கொண்டம்

2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் நாள் செவ்வாய்கிழமை

மோ.வா.வி.இ.கோ.மனு எண். 37/2020

(ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற மோ.வா.வி.இ.கோ.மனு எண்.20/2019)

கணேசன்,60
த/பெ, நடேசன்
சிவன் கோவில் தெரு,
காரைக்குறிச்சி கிராமம்,
உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். மனுதாரர்.

எதிர்

1. பிரபு
த/பெ. ஜெகநாதன்,
எண்.7 சின்னவளையம் அரிசனா தெரு,
ஜெயங்கொண்டம் அஞ்சல்,
உடையார்பாளையம் தாலுாக்கா,
அரியலூர் மாவட்டம்.

2. மேலாளர் அவர்கள்,
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட்,
TVK காம்பளக்ஸ் எண். 49/A1, சிதம்பரம் ரோடு,
ஜெயங்கொண்டம்
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம் எதிர்மனுதாரர்கள்.

இந்த வழக்கானது முதலில் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் முதலில் மோ.வா.வி.எண் 20/2019 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அரியலூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில்

இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு வந்ததன் பேரில் இந்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட இம்மனுவில் மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜெயராமன் அவர்களும் 1ம் எதிர்மனுதாரர் சார்பில் டி. ஜோதிமணி அவர்களும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஜோஅல்மெய்டா அவர்களும் முன்னிலையாகியுள்ள இவ்வழக்கு இறுதியாக இன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார். மனுதாரர் ஆஜராகவில்லை இதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் இன்று பிறப்பிக்கும்

ஆணையுரை

1. 30.10.2017 ம் தேதி நடந்த மோட்டார் வாகன விபத்தில் மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ 10,00,000/- இழப்பீடு கோரி இம்மனுவினை மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166 கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் இருவர் சார்பிலும் வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளனர். இருப்பினும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் எதிர்மனுதாரர்கள் இருவரும் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர். இந்நிலையில் மனுதாரர் தரப்பு ஒருதலைபட்ச விசாரணை வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

3. பலமுறை வாய்ப்பு அளித்தும் மனுதாரர் தனது தரப்பில் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இன்றைய தினம் இந்த மனு விசாரணைக்கு வந்த போது மனுதாரர் ஆஜரில்லை. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார். இருப்பினும் பலமுறை வாய்ப்பு அளித்தும் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால் மனுதாரரின் தவறுகையின் காரணத்தினால் இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக மனுதாரர் ஆஜரில்லை. மனுதாரரரின் தவறுகையின் காரணமாக இந்த மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த ஆணையுரையானது நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/
சிறப்பு நீதிபதி எண். 1,
ஜெயங்கொண்டம்